T.C-019

001/DD/23

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

## DEPARTMENTAL EXAMINATIONS

## SECOND CLASS LANGUAGE TEST — PART – A WRITTEN EXAMINATION (TRANSLATION, COMPOSITION, LETTER WRITING AND LANGUAGE SKILLS)

(Without Books)

Maximum Time : 2.30 hours — Maximum Marks : 100

குறிப்பு :

1. அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

2. வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது.

3. கையெழுத்து தெளிவாகவும், விடைகள் குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.

### பகுதி — I

1. ஆங்கிலப் பத்தியைத் தமிழாக்கம் செய்க. (1 × 10 = 10)

Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutam region was fit for cultivation, as it had the most fertile lands. The prosperity of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.

கீழ்க்காணும் தலைப்புகள் ஒவ்வொன்றிற்கும் 150 வார்த்தைகளுக்கு மிகாமல் கட்டுரை எழுதுக. (2 × 15 = 30)

2. பெண்கல்வி குறித்து கட்டுரை எழுதுக.

3. சிக்கனமும் சிறுசேமிப்பும்.

4. நூலக வசதி வேண்டி விண்ணப்பித்தல். (10)

[Turn over

## பகுதி — II

5. பின்வரும் பத்தியைப் படித்து வினாவிற்கேற்ற விடையளிக்கவும். (5 × 1 = 5)

மொழிபெயர்த்தல் என்ற தொடரைத் தொல்காப்பியர் மரபியலில் (98) குறிப்பிட்டுள்ளார். "மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்" என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு சங்க காலத்திலேயே தமிழில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டதைப் புலப்படுத்துகிறது. வடமொழியில் வழங்கி வந்த இராமாயண, மகாபாரத தொன்மச் செய்திகள் சங்க இலக்கியங்களில் பரவலாக இடம் பெற்றுள்ளன. இதுவும் பிறமொழிக் கருத்துகளைக் கதைகளைத் தமிழ்ப்படுத்தியமையைப் புலப்படுத்துகிறது. பெருங்கதை, சீவக சிந்தாமணி, கம்பராமாயணம், வில்லிபாரதம் முதலிய சில காப்பியங்களும் வடமொழிக் கதைகளைத் தழுவிப் படைக்கப்பட்டவையே.

(அ) தொல்காப்பியர் மொழிப்பெயர்த்தல் பற்றி கூறிய இயல் எது?

(ஆ) சின்னமனூர்ச் செப்பேடு மொழிபெயர்ப்பு பற்றிக் கூறிய செய்தி யாது?

(இ) வடமொழிக் கதைகளைத் தழுவி படைக்கப்பட்ட நூல்கள் யாது?

(ஈ) இப்பத்தியில் இடம்பெறும் செப்பேட்டுக் குறிப்பு எவ்வூரைச் சார்ந்தது?

(உ) வடமொழிக் காப்பியங்கள் யாவை?

6. கொடுக்கப்பட்டுள்ள சூழ்நிலைக்கு ஏற்ப உரையாடலை நிறைவு செய்க. (5 × 1 = 5)

ஆசிரியர் : நேற்று வரை படித்த பாடங்களை நினைவில் வைக்க முடிகிறதா?

மாணவர் : ————— —————

ஆசிரியர் : படித்தாலும் மறந்து போய் விடுகிறது என்கிறீர்கள். இதற்கு நவீன அறிவியல் உலகில், புதிய கண்டுபிடிப்பு எதுவும் உள்ளதா? அதன் பெயர் என்ன?

மாணவர் : —————

ஆசிரியர் : கணினிக்குள் எல்லாவற்றையும் பதிவிறக்கம் செய்ய முடியுமா?

மாணவர் : —————

ஆசிரியர் : நூலகமோ, புத்தகங்களோ தேவையில்லையா?

மாணவர் : —————

ஆசிரியர் : எளிதாகவும் பாதுகாப்பாகவும் உள்ள கணினியைப் பயன்படுத்தி வாழ்வில் முன்னேற வாழ்த்துக்கள்.

மாணவர் : —————.

## பகுதி — III

### மொழிப்பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடையளி : (40 × 1 = 40)

7. 3350 என்ற எண்ணை எழுத்தால் எழுதுக.

8. 'அழகு' என்ற சொல்லைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.

9. Emblem – கலைச்சொல்லைத் தமிழாக்கம் செய்க.

10. "தமிழர் திருநாள்" தமிழ் மாதங்களில் எந்த மாதம் கொண்டாடப்படுகிறது?

11. முதலெழுத்துகள் மொத்தம் எத்தனை?

12. விடுபட்ட எழுத்துகளை எழுதுக. த __ தி __ து __.

13. உரிய நிறுத்தற்குறியிடுக.

என் பெயர் எழில் இவர்கள் எல்லாரும் என்னை இப்படித்தான் அழைப்பார்கள் இவர்களைப் பற்றிச் சொல்லட்டுமா

14. பின்வரும் தொடர்களில் உள்ள வினைச் சொல்லை எடுத்து எழுதுக. வாணி கட்டுரை எழுதினாள்.

15. திருமால், கரடி, மனிதன், இவற்றில் அஃறிணை எது?

16. நெடில் எழுத்துகளைக் கண்டறிந்து எழுதுக.

எல்லா பறவைகளுக்கும் காது உண்டு

17. பிழை திருத்தி எழுதுக.
குயில் கத்தும்

18. விடைக்கேற்ற வினா அமைத்து எழுதுக.
பரஞ்சோதி முனிவர் திருமறைக் காட்டில் பிறந்தவர்.

19. எண்ணுப் பெயர்களைக் கண்டு தமிழ் எண்களில் எழுதுக.
நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி.

20. முதல் எழுத்தை மாற்றி புதிய சொல் ஒன்றை எழுதுக.
காடு –

21. குறில் எழுத்துகளைக் கண்டறிந்து எழுது.
ஆபரணம்

22. இரு பொருள் தருக.
மெய் –

23. அகர வரிசையில் எழுதுக.
பிண்ணாக்கு, போர்வை, பீர்க்கு, பூமி, புத்தகம்

24. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
விடு – வீடு

25. தொடரைப் படித்து விடையைக் கண்டறிக.
நூலின் பயன் படித்தல் எனில் கல்வியின் பயன் ———— (கற்றல் / எழுதுதல்)

26. சொல்லை இடம் மாற்றிப் பழமொழியைக் கண்டுபிடிக்க.
மிஞ்சினால் அளவுக்கு நஞ்சு அமிழ்தமும்

27. பொருந்தாத சொல்லை எடுத்து எழுதுக.
மூச்சு, பத்து, பட்டு, அழகி.

28. சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுது.
வீட்டிற்கு ஒரு ———————— வளர்ப்போம் (மறம், மரம்)

29. வினைச்சொல்லை எடுத்து எழுதுக.
தச்சன் நாற்காலியைச் செய்தான்.

30. திணை வகையைச் சுட்டுக.
யானை

31. பால் வகையைச் சுட்டுக.
தலைவி

32. சரியான ஒருமை பன்மை கொண்டு முடிக்கவும்.
மாடுகள் புல் மேய்ந்தது.

33. பொருத்தமான சொற்களால் கட்டங்களை நிரப்புக.

'புள்' என்பதன் வேறு பெயர் ————————

| | | |
|---|---|---|
| | | |

34. நிகழ்காலம் – குறிக்கும் சொல்லை எடுத்து எழுதுக.
உண்பான், நடந்தான், ஓடுகிறான்.

35. பிறமொழிச் சொல்லிற்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.
ஈக்வலாக
சொல்லையும் பொருளையும் பொருத்துக.

36. கொண்டல் – மேற்கு

37. கோடை – தெற்கு

38. வாடை – கிழக்கு

39. தென்றல் – வடக்கு

40. உவமைத் தொடர்களைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க.
உடலும் உயிரும் போல.

41. பின்வரும் சொல்லுக்கு இருபொருள் தருக.
நகை

42. பிரித்து எழுதுக: எழுதிப் பார்ப்பேன்

43. சந்திப் பிழை நீக்கி எழுதுக.
கல்லணையை கட்ட கரிகாலன் எடுத்து கொண்ட முயற்சியை கூறுங்கள்.

44. கீழ்க்கண்டவை விடையாக அமையும் படி வினா அமைக்கவும்.
குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை.

45. சொற்களைப் பிரித்துப் பார்த்துப் பொருள் தருக.
கானடை

46. முத்தமிழ் – தொகைச் சொல்லை விரித்து எழுதுக.

---